**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | தங்கமணி |
| Husband Name | : | சண்முகசுந்தரம் |
| Village | : | வேலாயுதம்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 52 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 31.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லதரசியாக உள்ளேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை. அன்றை தினம் சுமார் மதியம் 1.00 மணியளில் ஈரோடு – முத்தூர் ரோடு, வேலாயுதம் பாளையம் அருகே விபத்தில் அடிபட்ட நபர் அவரது இருசக்கர வாகனமான டிவிஎஸ் XL ல் வந்து கொண்டிருக்கும்போது அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. விபத்தில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏறப்பட்டிருந்தது. பின்னர் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். விபத்து சமயத்தில் ஆஜர் எதிரிதான் அரசு பேருந்தை ஓட்டி வந்த நபர் ஆவார். பின்னர் விபத்தில் அடிபட்ட நபர் இறந்துவிட்டதாக தகவல் கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இறந்த நபருடன் அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் யாரும் வரவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அவரது உறவினர் யாரும்

வரவில்லை என்றால் சரிதான். பேருந்தின் பின் பக்க படிக்கட்டு மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். நான் எனது வீட்டின் கிழபுறமாக உள்ள தோட்டத்தில் இருந்தேன் என்றால் சரிதான். விபத்தான சத்தம் கேட்டுத்தான் ரோட்டிற்கு சென்றுபார்த்தேன் என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் வயதான நபர் ஆவார் என்றால் சரிதான். நான் தோட்டத்தில் இருந்து 5 நிமிடம் கழித்து சென்று பார்த்தேன் என்றால் சரிதான். பேருந்தை ஓட்டிய நபரை இன்றுதான் எனக்கு தெரியும். விபத்தில் அடிபட்ட நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.31 18:47:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்